எடுக்க இயலாத நிலை உள்ளது. மேலும், அணையினைப் பார்வையிடும் பார்வையாளர்களின் எண்ணிக்கையும் மிகக் குறைவாக உள்ளது. எனவே, அமராவதி அணைப் பகுதியில் வண்ண மீன் காட்சியகம் அமைக்க சாத்தியக்கூறுகள் குறைவாக இருப்பதால், இங்கு வண்ண மீன் காட்சியகம் அமைக்க இயலாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 336, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன், மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

336—

நுழைவுக் கட்டணம்

***7632—திரு. அ. சவுந்தரராசன்:**

மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அனைத்துத் திரையரங்குகளிலும் அரசு நிர்ணயித்த நுழைவுக் கட்டணத்தை காட்சிக்கு வைக்கவும், அக்கட்டணத்தை வசூலிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தமிழ்நாட்டிலுள்ள அனைத்துத் திரையரங்குகளிலும் அரசு அனுமதித்த கட்டணத்தை வசூலிப்பது தொடர்பாக விளம்பரப் பலகைகள் வைக்கப்பட்டுள்ளன. விளம்பரப் பலகைகள் வைக்கப்படாத திரையரங்குகளில் உடனடியாக விளம்பரப் பலகையை வைக்க நடவடிக்கை எடுக்கவும், அரசு நிர்ணயித்த கட்டணத்தை வசூலிக்கவும் நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரை, மாநகர காவல் ஆணையாளருக்கும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது

2015 செப்டம்பர் 23]

என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு மிக முக்கியமான பிரச்சினை. இது ஏழை மக்களுடைய மகிழ்வான பொழுதுபோக்குக்கான அடிப்படை. திரையரங்குகளின் வகைக்கு ஏற்பவும், வகுப்பிற்கு ஏற்பவும் அரசு நுழைவுக் கட்டணத்தைத் தீர்மானித்து இருக்கிறது. அந்த நுழைவுக் கட்டணத்திற்கான விளம்பர போர்டுகளை இப்போது பல திரையரங்குகளில் பார்க்க முடியவில்லை. அரசு நிச்சயித்து இருக்கின்ற கட்டணத்தின்படி அச்சடிக்கப்படுகின்ற டிக்கெட்டுகளின் பின்பக்கத்தில் வணிக வரித் துறை முத்திரை போடப்பட்டிருக்க வேண்டும். அந்த டிக்கெட்டுகளைத்தான் விநியோகிக்க வேண்டும். ஆனால், இப்போது எல்லா திரையரங்குகளிலும், வணிக வரித் துறையின் முத்திரை போடப்பட்ட டிக்கெட்டுகளை கொஞ்சம் விற்றுவிட்டு, வணிக வரித் துறையின் முத்திரை போடப்படாத, அவர்களின் சொந்த டிக்கெட்டுகளை விற்பது பெருமளவிற்கு நடக்கிறது.

வணிக வரித் துறை திரையரங்குகளின் உரிமங்களை ஆண்டுதோறும் புதுப்பிக்கும் நிலை முன்பெல்லாம் இருந்தது. இப்போது ஆண்டுதோறும் வணிக வரித் துறையிடம் அவர்கள் செல்ல வேண்டிய அவசியம் இல்லாமல் அது மாற்றப்பட்டிருக்கிறது. அது திரையரங்கு உரிமையாளர்களுக்கு வசதியாகிவிட்டது. காவல் துறைமூலம் லைசன்சை மட்டும் புதுப்பிக்க வேண்டும் என்றாகி இருக்கிறது. ஆகவே, திரையரங்கு உரிமையாளர்கள் இப்போது இருக்கின்ற இந்த நிலைமையைப் பயன்படுத்தி கூடுதலாக பணம் வசூலிக்கிறார்கள்.

படம் வெளியானவுடன், நடிக்கின்ற நட்சத்திரங்களின் மதிப்பிற்கேற்ப 200 ரூபாய், 300 ரூபாய் என்று முதல் 10 நாட்கள் அதிகக் கட்டணம் வசூலிக்கின்ற நிலைமை இருக்கிறது. பெரிய வணிக வளாகங்களில், Mall –களில் கட்டப்படக்கூடிய திரையரங்குகளில் குறைந்தபட்சக் கட்டணமே 250 ரூபாய் என்று ஆகிவிட்டது. அங்கெல்லாம் கேளிக்கை வரி வசூலிப்பதற்கான

[2015 செப்டம்பர் 23

உத்தரவாதம் இருக்கிறதா என்பதே சந்தேகமாக இருக்கிறது. Online booking நடக்கிறது; அதற்கெல்லாம் கேளிக்கை வரி வசூல் செய்யப்படுகிறதா என்பது கேள்விக்குறியாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன், சுருக்கமாகக் கேள்வியைக் கேளுங்கள்.

திரு. அ. சவுந்தரராசன்: ஆகவே, நுழைவுக் கட்டணம் பற்றிய அறிவிப்புப் பலகையினை அனைத்துத் திரையரங்குகளிலும் வைப்பதை உறுதிப்படுத்தவும், கூடுதல் விலைக்கு டிக்கெட் விற்கப்பட்டால் புகார் செய்ய வசதியாக இலவச தொலைபேசி எண்ணுடன் புகார் செய்யும் ஏற்பாடும், விதிகளை மீறும் திரையரங்கு உரிமையாளர்கள்மீது கடுமையான நடவடிக்கையும் எடுக்கப்படுமா என அரசிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள அனைத்துத் திரையரங்குகளிலும் தமிழ்நாடு திரையரங்கு ஒழுங்குமுறை விதிகள் 1957, பகுதி 5, உப விதி 83/1A மற்றும் B-ல் தெரிவித்துள்ளவாறு, நிர்ணயிக்கப்பட்ட வகுப்புக் கட்டணங்களை வசூலிப்பது தொடர்பான விளம்பரப் பலகையினை பொதுமக்கள் பார்வையிடுமாறு வைக்கப்பட வேண்டுமென்று அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். திரையரங்குகளில் அரசு அனுமதித்த கட்டணங்களிலேயே கணினியில் முன்பதிவு செய்வதற்கு பன்முக திரையரங்குகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அனுமதித்த கட்டணம் வசூலிப்பது தொடர்பான விளம்பரப் பலகைகளை வைக்காத திரையரங்குகளின்மீது தமிழ்நாடு திரையரங்கு ஒழுங்குமுறை விதிகள் 1957, பகுதி 5, உப விதி 83/1A மற்றும் B-ன்படி அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களாலும், சென்னை நகரைப் பொறுத்தவரை, மாநகர காவல் ஆணையாளர் அவர்களாலும் உரிய நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2015 செப்டம்பர் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

முற்பகல் 11–20

திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரையரங்குகளில் இருக்கின்ற நிலைமையை அறிந்து, மக்கள் திரையரங்குகளில் குறைவான கட்டணத்தில் படம் பார்க்க வேண்டும் என்பதற்காக, சென்னையில் 7 அம்மா திரையரங்குகள் கட்டப்படும் என்கிற அறிவிப்பு ஏற்கெனவே செய்யப்பட்டுள்ளது. அதற்கான ஏற்பாடுகள் இன்னும் தொடங்கப்பட்டதாகத் தெரியவில்லை. மேலும், எல்லா நகரங்களிலும், அரசு கலையரங்குகள் மற்றும் திரையரங்குகள் கட்ட ஏற்பாடு செய்யப்படுமா என்பதையும், அதன்மூலம் ஏழை மக்களுக்கு உதவ வழி செய்யப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், திரையரங்களில் அதிகமான கட்டணம் வசூலிக்கப்படுகிறது என்று கூறினார்கள். மாநகராட்சிப் பகுதிகளில், குளிர்சாதன வசதியுள்ள திரையரங்குகளில் குறைந்தபட்சம் ரூ.10/–ம், அதிகபட்சம் ரூ.50/–ம், குளிர்சாதன வசதி இல்லாத திரையரங்குகளில் குறைந்தபட்சம் ரூ.7/–ம், அதிகபட்சம் ரூ.30/–ம் வசூலிக்கப்படுகின்றது. நகராட்சிப் பகுதிகளில், குளிர்சாதன வசதி உள்ள திரையரங்குகளில் குறைந்தபட்சம் ரூ.5/–ம், அதிகபட்சம் ரூ.40/–ம், குளிர்சாதன வசதி இல்லாத திரையரங்குகளில் குறைந்தபட்சம் ரூ.4/–ம், அதிகபட்சம் ரூ.30/–ம் வசூலிக்கப்படுகின்றது. பேரூராட்சிப் பகுதிகளில், குளிர்சாதன வசதி உள்ள திரையரங்குகளில் குறைந்தபட்சம் ரூ.5/–ம், அதிகபட்சம் ரூ.25/–ம், குளிர்சாதன வசதி இல்லாத திரையரங்குகளில் குறைந்தபட்சம் ரூ.4/–ம், அதிகபட்சம் ரூ.20/–ம் வசூலிக்கப்படுகின்றது. கிராமப் பஞ்சாயத்துப் பகுதிகளில், குளிர்சாதன வசதி உள்ள திரையரங்குகளில் குறைந்தபட்சம் ரூ.5/–ம், அதிகபட்சம் ரூ.15/–ம், குளிர்சாதன வசதி இல்லாத திரையரங்குகளில் குறைந்தபட்சம் ரூ.4/–ம், அதிகபட்சம் ரூ.10/–ம் வசூலிக்கப்படுகின்றது. பன்முக திரையரங்குகள், 15 நிபந்தனைகளை நிறைவு செய்யும்பட்சத்தில், குறைந்தபட்சம் ரூ.10/–ம்,

அதிகபட்சம் ரூ.95/—ம் வசூலிக்கின்றன; 10 நிபந்தனைகளை நிறைவு செய்யும்பட்சத்தில், குறைந்தபட்சம் ரூ.10/—ம், அதிகபட்சம் ரூ.85/—ம் வசூலிக்கின்றன. திரையரங்குகளில் மூன்று திரைகள், உணவு, பொழுதுபோக்கு வசதிகள் இருக்கும்பட்சத்தில், குறைந்தபட்சம் ரூ.10/—ம், அதிகபட்சம் ரூ.120/—ம் வசூலிக்கப்படுகின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அம்மா திரையரங்குகள் அமைக்கப்படுமா என்ற கேள்வியை எழுப்பினார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அறிவித்த திட்டங்கள் எதையும் செயல்படுத்தாமல் விட்டதாக வரலாறே கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் அறிவிக்கப்படும் திட்டங்கள் அத்தனையும் மக்களுடைய பயன்பாட்டுக்கு வந்தே தீரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மீதியுள்ள வினாக்கள் பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடுகள்)*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன், நீங்கள் கொடுத்த கவன ஈர்ப்பு குறித்த அறிவிப்பு எனது ஆய்வில் இருக்கின்றது. (குறுக்கீடு) இப்பொழுதுதானே வந்து கொடுத்தீர்கள். (குறுக்கீடு) இல்லை, இப்பொழுதுதான் வந்து கொடுத்திருக்கிறீர்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) அதெல்லாம் என்னுடைய ஆய்வில் இருக்கின்றது. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) காலையில்தானே வந்து*